**எல்ல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 09 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 24 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, எல்ல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 392,050 தொகை குறைவாக கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 242,802 தொகை மிகையாகக் கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் வருமானம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 762,891 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் அப்பெறுமதியினால் செலவு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் இருப்பு ரூபா 11,555 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீர்க்குழாய்களின் இருப்பு ரூபா 29,900 தொகை மிகையாகக் கணக்கீடு செய்திருந்தமையினால் அப்பெறுமதியினால் நடைமுறை சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் ரூபா 21,773,660 தொகை கணக்கீடு செய்திருக்காமையால் அப்பெறுமதியினால் செலவு மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பு ரூபா 16,402 தொகை கணக்கீடு செய்திருக்காமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 18,202 தொகையான ஊழியர் பிணை வைப்புக்கள் கணக்கீடு செய்திருக்காமையால் அப்பெறுமதியினால் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) ரூபா 121,526 தொகைக்கான ஊழியர் பிணை வைப்புக்கள் சொத்துக்கள் என இனங்காணாமையினால் அப் பெறுமதியினால் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 15,120 தொகை கணக்கீடு செய்திருக்காமையால் அப்பெறுமதியினால் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற்கான முதலீடுகள் ரூபா 189,435 தொகை மிகையாகக் கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) நூலக புத்தகங்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 17,435 தொகை கணக்கீடு செய்திருக்காமையால் அப் பெறுமதியினால் நூலகப் புத்தகங்கள் கணக்கு மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்க குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 12,023,831 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 6,311,200 தொகை வீதவரி, ரூபா 2,965,749 இற்கான ஏனைய வருமானங்கள், ரூபா 1,893,264 தொகைக்கான நீர்க் கட்டணம் மற்றும் ரூபா 505,679 தொகைக்கான கடை வாடகையும் அடங்கியுள்ளது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 4,124,897 தொகைக்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 715,724 தொகைக்கான பலவின கடன்கொடுத்தோர், ரூபா 3,336,194 தொகைக்கான நிர்மாணவேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 72,979 தொகைக்கான கணக்காய்வுக் கட்டணம் என்பன அடங்கியுள்ளன.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 57,644,105 தொகையான 03 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

#### 1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| | (i) பிரிவுகள் 49 மற்றும் 52 | - | 2017 ஆண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 16 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் இனங்கண்டிருந்த போதிலும் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) பிரிவுகள் 158 மற்றும் 159 | 11,518,152 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| | (iii) 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 8 ஓ(1) | 1,426,920 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா விடுதி ஒன்று நிர்மாணிப்ப தற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் நிர்மாணவேலை மேற் கொண்டிருந்தமையால் தண்டம் மற்றும் கட்டணமாக கணிக்கப் பட்டிருந்த தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| | (i) விதி 29 | | நாளாந்த பெறுவனவுகள் உரிய தினத்தில் வைப்புச் செய்திருக்கவில்லை. |
| | (ii) விதி 156 | | கொடுப்பனவு காசேடு சரியான முறையில் தயாரித்திருக்கவில்லை. |
| | (iii) விதி 202 | 48,777 | நீர்குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு மற்றும் வழங்குதல் இருப்பு பதிவேடுகளில் பதிந்திருக்கவில்லை. |
| | (iv) விதி 218 | | ஆண்டிற்கு ஒருமுறை காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1988 இன் 56 இன் மற்றும் 2000 இன் 53 இன் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் 1533/16 ஆம் இலக்க 2008 ஜனவரி 23 திகதிய அதிவிஷேட வர்த்தமானி | மீளாய்வாண்டிற்கான சுற்றாடல்சார் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக வருடாந்த கணிப்பீடு மேற்கொண்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 25,662,283 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,929,767 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமனம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 9,544,308 | 4,837,999 | 1,670,325 | 3,293,250 | 5,006,630 | 6,177,542 | 4,525,705 | 659,845 |
| (ii) வாடகை | 715,200 | 818,838 | 537,806 | 1,777,394 | 715,200 | 277,610 | 474,916 | 240,283 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,157,000 | 4,773,390 | 17,337,170 | 11,778,790 | 6,108,600 | 7,543,433 | 10,563,678 | 4,637,678 |
| மொத்தம் | 10,416,508 | 10,430,227 | 19,545,301 | 16,849,434 | 11,830,430 | 13,998,585 | 15,564,299 | 5,537,806 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 10.4 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 19.5 மில்லியன் ஆகும். ஏவ்வாறாயினும் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 16.8 மில்லியன் வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 204 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

வாராந்த சந்தை கேள்வி நடைமுறையின் படி கொடுத்ததன் மூலம் சபைக்கு பெற வேண்டிய ரூபா 136,180 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 821,969 முத்திரைக் கட்டணம் 2,128,665 உம் ஆகும்.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொதுப் பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

2014 ஆண்டின் போது எல்ல பிரதேச சபை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,222,335 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இது வரை எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை நெருங்கியிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த விளைவுகளை பெற்றிருக்காமை**

எல்ல பொருளாதார நிலையம் நிறுவுவதற்கான காணிகள் தனதாக்கல் செய்வதற்காக 2016 ஆண்டின் போது ரூபா 8,400,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த காணியை இது வரை தனதாக்கியிருக்கவில்லை.

**(ஈ) நிலை பேறான அபிவிருத்தி குறிக்கோள்**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காத காரணத்தினால் அக் குறிக்கோள்களுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும்

சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் தயாரித்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டு அறிக்கையில் அடங்கிய 09 அவதானிப்புக்கள் மற்றும் பிரேரணைகளில் 06, 2017 திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 30 ஊழியர்களின் மிகையொன்றும் 07 ஊழியர்களின் பற்றாக்குறையும் காணப்பட்டது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்காக 2016/2017 ஆண்டுகளின் போது வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் உரிய தினத்தில் மேற்கொள்ளப்படாமையால் ரூபா 4,052 தொகை தண்டமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கேள்வி பகிரங்கப்படுத்துவதற்காக செய்தித்தாள் கட்டணமாக ரூபா 50,715 தொகை செலுத்தியிருந்த போதிலும் வாகனம் கொள்ளவனவு செய்யும் கேள்வி நடவடிக்கைகளை இரத்து செய்யப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆண்டின் போது எல்ல பிரதேச சபை அலுவலகத்திற்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கும் போது கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகளை கவனத்தில் எடுக்காமல் ரூபா 2,222,335 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் மண்சரிவு காரணமாக அழிவடைந்திருந்தது.

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

நடைமுறையாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### 3.5.2 ஒப்பந்த நிருவாகம்

(அ) எல்ல பிரதேச சபை கட்டிடம் நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தக்காரருடன் ரூபா 50,124,060 இற்கான பெறுமதிக்கு 2016 மே 15 மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணவேலை 2017 ஜனவரி 15 திகதிக்கு பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் 2017 அக்தோபர் 31 திகதி வரை பூர்த்தி செய்திருக்காததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் ரூபா 2,506,203 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 3,870,190 தொகை பெறுமதியான எல்ல உடல் ஆரோக்கிய நிலையம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு சமூக அடிப்படை நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் ஒட்டுமொத்த நிர்மாணவேலைக்காக மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணைக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

| | முறைமை | குறைபாடு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) கணக்கு மீதி மற்றும் துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்படல்.<br>(ii) கொடுப்பனவுகள் வகைப்படுத்தி கணக்கீடு செய்திருக்காமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | உடனடியாக சரிபிழை பார்க்கக் கூடிய விதமாக பண்டங்கள் களஞ்சியப்படுத்தி யிருக்காமை |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) இயந்திர உபகரணங்களில் நாளாந்த ஓட்ட விபரங்கள் பேணப்பட்டிருக்காமை.<br>(ii) வாகனங்களை பராமரித்தல் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வை பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | நிர்மாண வேலைக் கட்டுப்பாடு | நிர்மாண வேலைகள் போதியளவில் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு தொடர்பாக பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |